# சிறுகதை

## அந்த இறுதிக்கணங்கள்...

அகல்யா சிவகுமாரன், 10ஆம் வகுப்பு, பேர்கன்

அவள் வானத்தை வெறித்து பார்த்தபடி முழங்காலில் இருந்தாள். அவளுக்கு மூச்சு முட்டியது. அவளது வாயில் துணி அடைக்கப்பட்டு மூக்கை மூடி கட்டப்பட்டிருந்தது. மூச்சு விடுவது சிரமமாக இருந்ததுதான். ஆனால் அதுதான் அவளது மிக முக்கிய பிரச்சனையாக இருக்கவில்லை. அவள் ஏன் இந்த நிலையில் இங்கே இருந்தாள் என்பதை பற்றி சிந்தித்தாள்.

ஒரு ஆடிமாத காலைப்பொழுது. அவர்கள் அவளது வீட்டின் முன்னே தயாராக நின்றார்கள். அவள் வழமைபோல் வேலைக்கு போக புறப்பட்டாள். திடீரென யாரோ அவளை பிடித்திழுத்து ஒரு வெள்ளை வானுக்குள் தள்ளினார்கள். அவளுக்கு மரணபயம் ஏற்பட்டது. உடல் இயங்கமறுதத்து. அவர்கள் அவளை இழுத்துசெல்லும் போது அவள் கூச்சலிட முயன்றாள். ஆனால் அவர்கள் அவளது முகத்தை ஏதோ ஒன்றால் பொத்தி பிடித்தனர். அவள் கைகளையும் கால்களையும் வீசி உதைத்து விடுபட முயற்சி செய்தாள். ஆனால் அவளால் முடியவில்லை. அவளது அயலவர்கள் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்றாலும் எதையும் தடுக்க முயலவில்லை. தமக்கும் ஏதாவது நடக்கலாம் என்ற பயம் அவர்களுக்கு. அவர்கள் கதவை பூட்டி வாகனத்தை அங்கிருந்து வேகமாக ஓட்டி சென்றார்கள். ஒரு கறுப்பு உடை அணிந்த மெலிந்த உயரமான ஒருவன் அவளது முகத்தின் மீது ஏதோ ஒன்றை அழுத்தி பிடித்தபடி இருந்தான். அது ஏதோ மயக்கமடைய வைக்கும் பொருள் என்று அவள் உணர்ந்துகொண்டாள். சிறிது நேரத்தில் அவள் மயக்கமடைந்தாள்.

எழுந்தபோது தலை எல்லாம் சரியாக வலித்து. அவள் எங்கிருந்தாள் என்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு சில நிமிடங்கள் கடந்தபின்னர் அவளால் ஒழுங்காக சிந்திக்க முடிந்தது. ஆனால் எங்கே இருந்தாள் என்பதையோ, அல்லது எவ்வளவு நேரம் அங்கு இருந்திருந்தாள் என்பதையோ அவளால் இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் சுற்றுமுற்றும் பார்த்தபோது தான் கயிற்றால் கட்டப்பட்டு இருந்தாள் என்பதை உணர்ந்தாள். அவளிடம் இருந்த பொருட்களைக் காணவில்லை. தன்னை சுற்றியிருந்த கட்டுகளை அவிழ்க்க முயன்றாள் ஆனால் முடியவில்லை.

அவளது முதுகில் விழுந்த ஓர் உதை அவளை நிகழ்காலத்திற்கு கொண்டுவந்தது. அவள் கீழே விழுந்தாள். யாரோ சிரிக்கும் ஒலி கேட்டது. கீழே கிடந்த பலகையில் பட்ட கன்னத்தில் எற்பட்ட காயத்தால் இரத்தம் கீழ்நோக்கி வழிநத்து. அவளை உதைத்தவன் அவளை முழங்காலில் தூக்கி நிறுத்தினான். அவள் விழிகளை உயர்த்தி நீல வானத்தை பார்த்தாள்.

அடுத்த பகுதிதான் அவளுக்கு கூட நினைவில் இருந்தது. பல மணித்தியாலங்களுக்கு பின்னர் வாகனத்தின் கதவு திறக்கப்பட்டது. ஒரு சீருடை அணிந்தவன் கதவு இடுக்கில் நின்று வெளிச்சத்தை உள்ளே விட்டான். அவன் உடல் மண்நிறம், அவன் பற்களும் மண்நிறம். அவன் யார் என்று தெரியவில்லை. ஆனால் அவனைப் பார்த்த உடனே அவனை அவள் வெறுக்க தொடங்கினாள். அவன் அவளை வாகனத்தின் வெளியே இழுத்தான். தானாகவே நடக்க முயன்றாள். ஆனால் அந்த மயக்கமேற்படுத்தும் மருந்து இன்னும் அவள் உடலுள் இருந்தது.

அவர்கள் அவளை ஒரு கதிரைக்கு மாற்றினார்கள். அவர்களில் நான்குபேர். நான்குபேரும் ஆண்கள். அவள் யாருக்காக வேலைசெய்தாள் என்று கேட்டனர். அவள் பதில் சொல்லவில்லை. அவள் சுட்டுவிரலை முறித்தார்கள். அவர்கள் சிரிக்கும் பொழுது அவள் வலியால் கத்தினாள். அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவர்களிடம் வேறு வழிகள் இருந்தன. அவர்கள் அவள் தலையை மிளகாய்கள் உள்ள ஒரு மூட்டைக்குள் அடைத்தார்கள். அவள் நகங்களுக்கு கீழ் ஊசிகள் குத்தினர். அவள் இரத்தபற்றாகுறையை உணர பண்ணமட்டும் அவளை கத்தியால் குத்தினார்கள். தடிகளால் அடித்தார்கள். கடைசியில் சொன்னாள். ''ஆனந்தி'' என்று சோர்வுற்று சொன்னாள்.
'' என் பெயர் ஆனந்தி.''

அவர்களிடம் அவள் எல்லாவற்றையும் சொன்னாள். அவளின் ''பொய்'' வேலையை பற்றி. நாளிதழை பற்றி. அவள் எழுதி வெளிநாட்டுக்கு அனுப்பிய சட்டவிரோதமான கட்டுரைகளை பற்றி. எப்படி ஒரு அகதிபோல் உடை அணிந்து முகாமுக்குள் படம் எடுத்ததை பற்றி சொன்னாள். அவள் செய்ததெல்லாத்தையும் பற்றி கதைத்தாள். அவள் எதற்காக போராடினாள் என்று கூறினாள். அவளால் ஒழுங்காக கதைக்க முடியவில்லை. ஆனால் எல்லாவற்றையும் சொல்லிமுடித்தாள்.

யாரோ அவள் தலைமயிரை இறுக்கி இழுத்தார்கள். இன்னும் ஒரு முறை அவள் இறந்தகாலத்தை மறக்க முயன்றாள். மறக்க முடியாததை மறக்க முயற்சி செய்தாள். அவள் முன்னே இழுக்கப்பட்டாள். யாரோ அவளை ஒரு பெட்டிக்குமேல் ஏறச்சொன்னார்கள். வாயுக்கும் மூக்குக்கும் முன் இருந்த துணி எடுக்கப்பட்டது. பெட்டியில் நிற்கும் பொழுது, ஒரு சுருக்கு கழுத்தை சுற்றி சுற்றப்பட்டது.

'' எம் விருப்பத்திற்கு ஏற்றதாக நடந்தால் இது தான் தண்டனை'' என்று ஒரு ஆணின் குரல் ஒலித்தது. ஆனந்தி அந்த அழகிய நீல வானத்தை ஒரு கடைசி முறை பார்க்க பெட்டி அவள் கால்கள் கீழ் உதைக்கப்பட்டு, சுருக்கு அவள் கழுத்தை சுற்றி இறுக்கியது.